மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Religion and Humanity are United in Today's World

Dr. S. Amutha

Assistant Professor, Department of Tamil, Rajah Serfoji Government College, Thanjavur, India

Manuscript ID : **MT127A0061**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 21.10.2022
Revised: 02.11.2022
Accepted: 18.11.2022
Published: 30.11.2022

Pages : 196-200

DOI: 10.5281/zenodo.7375256

ABSTRACT:

Tamils divided them into five types namely Kurinji, Mullai, Marutham, Balai and Neithal. They distinguished two types of morals as internal and external. Internal and external organs are divided into seven categories. The grammer tholkappiyam is proof that those who divided the land also formalized the deities belonging to that land. Many Tamils who saw earthly deities also saw deity worship. In literature like Saiva Vainavam, they worshiped the deities according to castes and systematized with musical nuances.

Saiva world philosophy books are in Tamil language which is in many languages of the world. Contains various religious texts in Tamil languages. All the scriptures point out that it is God who is the subject of unlimited bliss, the beings who are capable of enjoying bliss, and the obstacles that prevent them from enjoying bliss. The best books available in Tamil language.

KEYWORDS:

Literature, Saivism, Vaishnavism, Fivefold

தொகுதி-2 பதிப்பு-4 டிசம்பர் 2022 | E-ISSN: 2583-0449

மதமும் மனிதமும் இணைந்தது இன்றைய உலகம்

முனைவர் சி. அமுதா,

உதவி பேராசிரியர்,

தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என ஐவகையாகப் பகுத்தனர். ஒழுக்கத்தினை அகம், புறம் என இருவகையாய் பிரித்தறிந்தனர். அகத்திணை புறத்திணைகளை ஏழு வகை திணைகளாக வகுத்தனர். இவ்வாறு நிலத்தினை வகுத்தவர்கள் அந்த நிலத்திற்குரிய தெய்வங்களையும் முறைப்படுத்தினர் என்பதற்கு தொல்காப்பிய நூற்பா சான்றாகும். நிலத்திற்குரிய தெய்வங்களைக் கண்ட பல தமிழர்கள் தெய்வ வழிபாட்டினையும் கண்டார்கள். சைவ வைணவம் போன்ற இலக்கியங்களில் இசை நுணுக்கருடன் முறைப்படுத்தி இனம் பிரித்து தெய்வங்களை வணங்கி வந்தனர்.

உலகம் மொழிகளில் பலவுள்ளும் திரு மொழியாம் தமிழ் மொழியில் அமைந்த சைவ உலக தத்துவ நூல்கள். தமிழ் மொழிகளில் பல்வேறு சமய நூல்கள் கொண்டது. நூல்கள் அனைத்தும் அளவில்லாதோர் ஆனந்த பொருளான இறையை, ஆனந்தத்தை அனுபவிக்கும் தன்மையுடைய உயிர்களை, ஆனந்தத்தை அனுபவிக்க இயலாத தடை செய்யும் தடைகளை போன்றவற்றை எடுத்துரைப்பது இறையாகும் என்பதை இறை நிலை நூல்கள் எடுத்துரைக்கின்றன. தமிழ் மொழியில் அமைந்துள்ள சிறந்த நூல்கள் இறை நூல்கள் பலவாகும். சைவம் வைணவம் போன்ற பிரிவுகள் சிலவாகும்.

கருச்சொற்கள்

இலக்கியம், சைவம், வைணவம், ஐந்திணை

முன்னுரை

வேதத்தைச் சார்ந்த வேத கருத்துக்களின் அடிப்படையில் உள்ள மதம் வைதீக மதம் ஆகும். வேதவழி நடப்பதே வைதீகம் எனப்படும். வேத ஒலி, வேதத்தில் கூறப்பட்டுள்ள ஆசாரத்தைக் கடைபிடித்து வாழ்பவர்கள் வைதீகர் எனப்படுவர்.

இந்த பிரபஞ்சப் படைப்பே வேத அடிப்படையில் நான்முகனால் செய்யப்பட்டது என்பது வேதக் கருத்து. வேதங்களைப் படைத்த ஆரியம் இருக்கை, அவர்களின் தென்புல வருகை, வருணப்பாகுபாடு, அவர்களது வைதீக சமயம் தமிழகத்தில் புகுந்து ஏற்படுத்திய தாக்கம் முதலியவற்றை உள்ளடக்கியதையும் அவற்றின் பாதிப்புகளை

முழுமையாக ஆராய்வதே கட்டுரை நோக்கம் என்றாலும் விரிவஞ்சி அடிப்படையான கருத்துக்களை மட்டுமே இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. மதங்கள் பல இருந்தாலும் மனிதம் என்பது ஒன்றே மனிதாபிமனம் என்பது அனைத்து மனிதர்களிடம் காணப்படுகிறது. மதங்கள் வேறுபட்டாலும் மனிதர்கள் ஒன்றாகவே வாழ்கின்றன. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்கின்றன. அவ்வகையில் ஆரிய மதத்தை குறித்து இவ்வாய்வு அமைகிறது.

ஆரியர் தம் இருக்கை

கி.மு 1500 காலம் அளவில் ஆரியர்கள் வட மேற்கு இந்தியாவிற்கு வந்தனர் என்பதும் பொது வழக்கு. அங்கு செழிப்பாக இருந்த சிந்து சமவெளியில் குடியேறினார்கள். பின்னர் முயற்சி செய்து மேய்ச்சல் நிலங்களை தேடி அலைய அலைய வடகிழக்கு கங்கை சமவெளியை நோக்கி நகர்ந்தார்கள். அவர்தம் ஊடுருவால் காலப்போக்கில் தென்னிந்தியா வரை எட்டியது. ஆரியர் என்ற சொல் அரி என்பதாகும். ஆரியர் சொல் அரி என்ற மூலத்தில் இருந்து உருவானது.

இக்குழுவினர் இந்தியாவிற்கு வட்சு நதிகரைகளிலிருந்து காந்தாரத்தில் புகுந்து பாஞ்சாலத்தை நோக்கி முன்னேறி வந்திருக்கலாம் என்றும் இவர்கள் ‘இந்தோ இரானியர்’ என்றும் குறிப்பிடலாம் என்றும் வரலாற்று இலக்கிய ஆசிரியரான ராகுல் சாங்கிருத்யாயன் குறிப்பிடுகிறார்.

சங்க காலத்திலேயே ஆரியர் ஊடுருவல் நிகழ்வு என்பதை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பாடல்கள் மூலம் அறியலாம். ஆரியர் தமிழர்களிடம் குறிப்பாக ஆளும் பகுதியினரிடம் செல்வாக்கு பெற்றது அவரது வயது பண்பாட்டின் விரிவாக்கத்தாலே என்பது பொதுவான கருத்துக்காக நிலவி வருகிறது. ஆரியர் சிறந்த பண்பாளர் ஆரியர் சொல்லும் முறைகளும் மேற்கொள்ள வேண்டும் என இன்றும் பல மக்கள் மேற்கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

ஆரியர் படைத்த வேதம்

ஆரியர்கள் படித்த வேதங்கள் நான்கு தொகுக்கப்பட்ட காலத்தை ஆராய்ச்சியாளர்கள் ஏறக்குறைய கி.மு 1300-ம் ஆண்டிலிருந்து 900 ஆண்டு வரைக்கு உட்பட்ட காலமாக வரவேற்கின்றன. பண்டைய ஆதி சமுதாயத்தை பற்றி தகவல்கள் முதன்முதலாக கொடுக்கும் இலக்கைச் சான்றுகளை இந்த வேத பாடலின் வாயிலாக அறிய முடிகிறது. வேதம் என்பதற்கு நானும் அறிவு என்பது பொருள். வேதம் என்றால் சொல் சமஸ்கிருதத்தின் வித் என்ற பகுதியின் அடியாக பிறந்தது ஆத்மாவில் பரமாத்மாவிடமிருந்து உருவாக்கியதே வேதங்கள்.

நான்கு வேதங்களிலும் மொத்தம் உள்ள மந்திரங்கள் 20,389 ஆகும். ஒவ்வொரு விதத்திலும் சம்கீதை மந்திரங்கள், பிராமணன், ஆரண்யகம், உபநீதம் என நான்கு பிரிவுகள் உள்ளன என்று குறைப்பது மூலம் வேதங்கள் எவ்வாறு உருவாக்கியது வேதங்களில் உள்ள பாடல்கள் எவை என்பதை இவை உரைப்பதாக அமைகின்றது.

வருணப்பாகுபாடும் ஆசிரமங்களும்

ஆரிய தம் சமுதாயத்திலுள்ளோரை பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வருணங்களாக பாகுபடுத்தினர். நான்கு என்ற பகுப்பை விரித்து கூறாவிடினும் நான்கு வருணத்தார் பற்றி குறிப்பு இருக்கும் வேதத்தில் புருஷ சூத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. வருணாசிரம அமைப்பு முறை பிற்பட்ட வேத காலத்தில் தோன்றிதாகும்.

இது வேதங்களுக்கு பின்னால் தோன்றிய கல்ப சூத்திரங்கள் எனப்படும் நூல்கள் அடிப்படையில் முதலாம் நூற்றாண்டு வாக்கில் எழுதப்பட்ட தரும சூத்திரங்களில் தெளிவாக்கப்பட்டது.

சமண, பௌத்தர்கள் பற்றிய முன்வைத்த விமர்சனங்களை எதிர்கொண்டு மேலும் வருணாசிரமத்தை வலுப்படுத்துவதற்கு பகவத்கீதை உருவாக்கப்பட்ட மகாபாரதத்தில் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டது.

இத்தரும் சாத்திரங்கள் சாதிப்பாகுப்பாடு செய்ததோடு மட்டுமின்றி சாதிகளிடையே ஏற்றத்தாழ்வையும் கற்பித்தன. சாதிகளுக்கு ஒரு நீதி வகுக்கப்பட்டது. இச்சாதி ஏன் இப்படியின் உச்சியில் பிராமணரும் அதுக்கு கீழே சத்தியரும் வைசியரும் அதற்கு கீழே சூத்திரங்களும் இடம்பெற்றன.

ஏற்றத்தாழ்வுகள் சாதிக் கொடுமைகளுக்கு வழிவகுத்துள்ள ஏற்கனவே குறிப்பிட்டபடி தொடங்கப்பட்ட சாதியை ஏற்ற தாழ்வுகள் இன்றி வரை நீடிக்கிறது எனலாம். கொடுமைகளின் தன்மைகள் மாறிருக்கலாம் பொருளாதார அந்தஸ்தை காட்டிலும் இந்த சடங்காசார அந்தஸ்தை சமூகத்தில் முதலிடம் வகித்தது என்று கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். இதன் பொருள் தீராத வெறுப்பு, பொறாமை பிராமணர்களை புசித்தல், இரக்கமின்மை ஆகியவை சூத்திரனின் இலட்சணம் என்பதாகும்.

வைதீக மதத்தை பற்றி கட்டுரை அமைந்தாலும் இன்றைய காலகட்டத்தில் மதங்கள் என்பது வெறும் மதமாக மட்டுமே உள்ளது. மக்கள் அனைவரும் ஒருத்தருக்கு ஒருத்தர் ஒற்றுமையாக நல்ல இணக்கத்தோடு வாழ்ந்து வருவதை அறியமுடிக்கிறது.

முடிவுரை

வைதீகம் தமிழ் மண்ணில் தோன்றியதல்ல, வடமேற்கு இந்தியா கங்கை சமவெளியில் தோன்றிய ஒன்று. வேதத்தையும் வருண ஆசிரமத்தையும், யாகத்தையும் ஆரிய ஆண் கடவுள்களையும் பார்ப்பன புரோகிதர்களையும் அடிப்படையாகக் கொண்டு வைதீகம் ஒரு மதம் என்ற வரையறையைக் கடந்தது. பண்பாடு என்கிற விரிந்த வரம்வை உடையது என்னும் கருத்தினை நோக்க வேண்டும். வைதீகத்தின் தலைமை பார்ப்பானியமாகும். இதுவரை சுருக்கமாக ஆரியர் தமிழகத்துக்கு வந்தனர், நிலைபெற்றனர், பண்பாட்டு வழியிலும் சமய வழியிலும் ஆறு கலப்பு நிகழ்ந்தேறியது என்பதை அறிய முடிகிறது. இன்றைய காலகட்டத்தில் மதங்கள் என்பது வெறும் ஜாதி சான்றிதழில் பதிப்பதற்காக மட்டுமே உள்ளது. மக்கள் அனைவரும் இன்று மதங்கள் பாராமல் ஒற்றுமையாக சுற்றம் உறவுகளை கொண்டாடியும் பந்தமாகக் கொண்டும் வருகின்றனர்.

தொகுப்புரை

1. இறைவனிடம் இணையற்ற அன்பு கொண்டவர்களாக அனைத்து சமயத்தினரும் காணப்பட்டுள்ளனர்.
2. இவற்றை எல்லாம் ஆராய்ந்து உண்மை காணும் உடைத்து காலத்தால் வழங்கிய எல்லா சமயங்களையும் பொதுநோக்கு உடையனவாய் அவற்றை அன்புடன் ஆதரித்து வந்தன என்பது பெறப்படுகிறது.
3. இன்றைய காலகட்டத்தில் காழ்ப்புணர்ச்சி என்பது சிறிதும் இன்றி அனைத்து சமயங்களையும் மத நல்லிணக்கணமாக விளங்குவதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம், சாரதாப் பதிப்பகம், 6/16, தொகுப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. மூன்றாம் பதிப்பு 2006
2. ஆய்வுக் கோவை பா.சுப்பிரமணியன் - இசையரசி பதிப்பகம், 25, பெரியார் நகர், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி - 620 005.
3. சு.சதாசிவம், ப.நடராஜன் - செம்மூதாய் பதிப்பகம், ரூபி ரெஸிடென்ஸி, கிழக்கு தாம்பரம், சென்னை - 600059.
4. சிற்பி பாலசுப்பிரமணியம் - தாமரைப் பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட், பி.சி கோயில் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை - 600098.
5. தட்சிணாமூர்த்தி. ஆ முனைவர் - தமிழர் நாகரிகமும் பண்பாடும் ஏபி1108, தென்றல் காலனி, மூன்றாம் தெரு, மேற்கு எண்ணனூர், சென்னை - 600040.
6. ராகுல் சாங்கிருத்யாயன் - வால்காவிலிருந்து கங்கை வரை, தமிழில் முத்து மீனாட்சி, பாரதி புத்தகாலயம், சென்னை.

7. லோகநாயகி. எம் முனைவர் - கட்டுரைக் கனிகள், ரோஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாட் எண் 28, பாஞ்சாலை நகர், கொள்ளு மேடு, ஆவடி, சென்னை - 600062. முதற்பதிப்பு 2013

REFERENCES

1. Elampuranar Urai -Tholkappiyam, Stratha Publication, 6/16 Thoguppu Venkatasalam Theru, Thiruvallikeni, Chennai.
2. Aiivu kovai - B.Subramaniyan – Esaiyarasi Pullications, 25, Periyar Nagar, Thiruvanaika, Thiruchi.
3. Chirppi Balasubramaniyam – Thamar Publication, Private limited, 49 kovil Estate, Amateur, Chennai. – 600040.
4. Thachchanamoorthi A – Tamilaga Nagarigamum Panpaadu, A.B 1108, The deal Colany, 3 rd Street, Merukku Ennur, Chennai – 600040
5. Ragul Sankiruthyayan – Vaalgavilieruinthu Gangai Varai, Tamilil Muthu Meenachchi, Bharati Buththagalayam, Chennai.
6. Loganayaki M – Katturai Kanikal, Katturai Kanigal, Rose Publication, Plot no 28, Banjalai Nagar, Kollu Medu Aavadi, Chennai 600062. First edition 2013.